இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 04

இறுதிப் பரீட்சை – 2020/2021

**EPD4531/ESD2231** – கற்றல் - கற்பித்தல் முன்னோக்கு

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக

## பகுதி - I

1. கற்றல் மற்றும் கற்பித்தல் என்பவற்றுக்கிடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.
2. முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலை என்பவற்றில் பயன்படுத்தக்கூடிய பத்து (10) வித்தியாசமான கற்றல்-கற்பித்தல் சாதனங்களைப் பட்டியற்படுத்துக.
3. "இடைநிலை கணிப்பீடு", "இறுதிநிலைக்கணிப்பீடு" ஆகிய பதங்களிற்கு இடையிலான வேறுபாடு என்ன?
4. "மகிழ்ச்சிகரமான கற்றல்" என்பதை சுருக்கமாக விபரிக்குக.
5. ஜோன் டியூவியுனுடைய முக்கியமான கல்வி எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.
6. இலங்கை ஆரம்பக்கல்வியில் காணப்படும் மூன்று (03) முதன்மை நிலைகளை சுருக்கமாக விபரிக்குக.
7. "பிள்ளை மையக்கற்றல்" எனும் பதத்தினை வரையறுக்குக.
8. விருப்பத்திற்குரிய தேர்ச்சிகள், அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் ஆகிய பதங்களிற்கு இடையிலான வேறுபாடுகள் என்ன?

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

i. "மகிழ்ச்சிகரமான கற்றல்" என்பதை பொருத்தமான வரைவிலக்கணத்தினூடாக சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் கற்றலில் உடனடி ஊக்கத்தினை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை? (05 புள்ளிகள்)

iii. முன்பள்ளியில் பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்கும் நான்கு (04) அம்சங்களை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

10.

**i.** ஆரம்பக் கல்வி பற்றிய பிளெட்டோவின் தத்துவப் பார்வையை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** "முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பப்பாடசாலை ஆசிரியரின் த்ரவிருத்திக்கு கல்வித்தத்துவம் பற்றிய முறையான விழிப்புணர்வு அத்தியவசியமாகும்" இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடையினை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

11.

**i.** 1997இல் அறிமுகப்படுத்தப்பட்ட கற்றல் தேர்ச்சிகள் **ஐந்தினைப் (05)** பெயரிடுக.

(04 புள்ளிகள்)

**ii.** ஆரம்பக்கல்வியில் முதன்மைநிலை III இல் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அடைவதற்கான முக்கியத்துவங்களை உதாரணங்களுடன் விபரிக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** முதன்மைநிலை I இருந்து அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியொன்றினை தெரிவு செய்து ஏனைய இரு முதன்மை நிலைகளுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

12.

**i.** வகுப்பறையில் ஆக்கபூர்வமான சுற்றாடலை பேணுவதற்கு ஆசிரியர் எடுக்கக்கூடிய **நான்கு (04)** செயல்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** நீங்கள் குறித்த ஆக்கபூர்வமான பௌதீக சுற்றாடல் உடைய வகுப்பறையை பேணும் போது முகங்கொடுக்கக் கூடிய **நான்கு (04)** சவால்களை குறிப்பிட்டு அச்சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வழிமுறைகளை பரிந்துரை செய்க.

(10 புள்ளிகள்)

13.

**i.** "கணிப்பீடு, "மதிப்பீடு" ஆகிய பதங்களிற்கு இடையிலான வேறுபாடு என்ன?

(04 புள்ளிகள்)

**ii.** அவதானித்தலை ஒரு கணிப்பீட்டு சாதனமாக பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய **மூன்று (03)** உண்மைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** கணிப்பீடானது மதிப்பீட்டிலும் பார்க்க சிறந்தது என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -